**கவனிக்க**.- *04.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1832 - 2013 ඔක්තෝබර් මස 11 වැනි සිකුරාදා - 2013.10.11

*1832 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*



# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1388* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1395* |



**கவனிக்க**.- (i) *இவ்வர்த்தமானியின் பகுதி* VI *இல் 2014 ஆம் ஆண்டிற்கான கொழும்பு மாவட்ட யூரிமார் பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2013, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, கார்த்திகை மாதம் 11 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, புரட்டாதி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே வடக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், டாம் வீதி, கொழும்பு 12 |

10-366

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

சட்ட அலுவலர் (நிறைவேற்றுப் பதவிக்குரிய கணத்தின் வகுப்பு III) பதவிக்குத் திறந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளல்

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்குக் கீழே குறிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- விளம்பரத்தில் குறிக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் பதவி வெற்றிடங்களின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர். இதன்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இலக்கம் 6 இல் குறிக்கப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் திட்ட வரையறைக்கு இசைவாகக் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **வேண்டப்படுகின்ற தகைமைகள்**.- (i) கல்வி/தொழில்சார் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டத்துறை சார்

பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) *அனுபவம்.-* உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் பெற்ற பின் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத தொழிற்படு நிலைத் தொழில் அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) *உடல் ரீதியிலான தகைமைகள்.-* அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கும் தகுந்த உடல் மற்றும் உள ரீதியில் ஏற்புடையவர்களாக இருத்தல் அவசியம்.

(iv) *ஏனைய தகைமைகள் :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்குப் பதவியில் இணைத்துக்கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்தவர்களாகவிருத்தல் வேண்டும்.

3. **பணியிலீடுபடுத்தும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனம் 3 ஆண்டு தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டது. நியமனம் பெற்று 3 வருடங்களுக்குள் முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) அரச மொழியற்ற மொழி மூலம் சேவைக்கு/பதவிக்கு இணைந்த அலுவலர்கள் குறித்த அரச கரும மொழித் தேர்ச்சியைத் தகுதிகாண் காலத்தினுள் பெற வேண்டும்.

பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் ஏற்பாடுகளின்படியும், அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமையவும் சேவைக்கு/பதவிக்கு இணைந்த மொழிக்கு மேலதிகமாகப் பிற அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறல் வேண்டும்.

(iv) இந்நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபன செயற்பாடுகள் நியதிக் கோவையின் ஏற்பாடுகள், நிதிப் பிரமாணத்தினதும், தாபன விதிக்கோவையினதும் ஏற்பாடுகள், திணைக்களத்தின் ஆணைகள், அரசினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் வெளியிடப்படுகின்ற ஆணைகளுக்கும் உட்பட்டுள்ளது.

4. **வயதெல்லை.-** விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்.-** இப்பதவிக்கு மாதாந்தம் ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555, மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரித்துடையது. (2006.04.25 ஆந் திகதியன்று பொ. நி. சு. இலக்கம் 6/2006 இன் இலக்கம் SLI-2006 சம்பள அளவு).

**6. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குக் கீழே குறிக்கப்பட்டுள்ள புள்ளி முறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :-**

| பாடம் | | உயர் புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பெற்ற சட்டத் துறை சார் பட்டம்- | | 20 |
| - முதல் வகுப்புச் சித்திக்கு | 20 | |
| - இரண்டாம் வகுப்பு உயர்மட்ட சித்திக்கு | 15 | |
| - இரண்டாம் வகுப்பு தாழ்மட்ட சித்திக்கு | 10 | |
| சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் முதல் வகுப்புச் சித்திக்கு | 15 | |
| சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்புச் சித்திக்கு | 10 | |
| (உயர் தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் - பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஒன்றுக்கு மாத்திரம்) | | |
| 2. மேலதிக தொழில்சார் தகைமைகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறைசார் ஒரு வருடத்துக்குக் குறையாத பட்ட மேற்படிப்பு டிப்ளோமா அல்லது சட்டத்துறை பட்ட மேற்படிப்பு டிப்ளோமா கற்கை நெறியொன்றுக்கு (ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் எனும் அடிப்படையில்) | | 15 |
| அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறைசார் ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா கற்கை நெறியொன்றுக்கு (ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் எனும் அடிப்படையில்) | | |
| அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை சார் மூன்று (03) மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் கற்கை நெறியொன்றுக்கு (ஒரு கற்கை நெறிக்கு 3 புள்ளிகள் எனும் அடிப்படையில்) | | |
| 3. மேலதிக அனுபவம் சட்டத்தரணியாக அரச சேவையில் அல்லது தனியார் பிரிவில் | | 30 |

| பாடம் | | உயர் புள்ளிகள் |
|---|---|---|
| அனுபவம் - ஒரு வருடத்துக்கு 5 புள்ளிகள் எனும் அடிப்படையில் 30 புள்ளிகள் (அடிப்படை தகைமையைப் பெறுவதற்குத் தேவையான சட்டத்தரணியாகப் பணியாற்றிய 3 வருட சேவைக் காலத்துக்குப் புறம்பாக) (20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்த சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது நீதிபதியொருவரிடமிருந்து பெற்ற சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவத்தை உறுதிசெய்தல் வேண்டும்.) | | |
| 4. கணனி அறிவு | | 15 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்புக்காக தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றிருப்பதற்கு | 15 | |
| அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றின் ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியொன்றுக்கு | 10 | |
| அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றின் மூன்று (03) மாதங்களுக்குக் குறையாத தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறியொன்றுக்கு | 05 | |
| 5. ஆங்கில மொழித் தேர்ச்சி | | 15 |
| ஆங்கில மொழி மூலமான பட்ட மேற்படிப்பு பட்டம்/ பட்டம்/பட்ட மேற்படிப்பு சட்டத்துறைப் பட்டம்/சட்டத்துறைப் பட்டம் | 15 | |
| (குறித்த பரீட்சை வினாத்தாள் அனைத்துக்கும் ஆங்கில மொழி மூலம் விடையளித்திருக்க வேண்டும்.) | | |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அல்லது அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றின் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா கற்கை நெறிக்கு | 10 | |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அல்லது அரசு அங்கீகரித்த நிறுவனமொன்றின் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் கற்கை நெறிக்கு | 05 | |
| 6. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | | 05 |
| | | 100 |

**7. விண்ணப்பதாரிகளது ஆளடையாளத்தை உறுதி செய்தல்.-** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை முன்வைக்கின்ற விண்ணப்பதாரிகள் மாத்திரமே கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சைக்கு அனைத்து சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும், முறையாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் முன்வைக்க வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை உறுதிசெய்வதற்குக் கீழே குறிக்கப்பட்டுள்ள ஆளடையாளத்தை உறுதிசெய்யும் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(2) அனுமதிக்கப்பட்ட கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பப்படிவங்கள் 2013.11.11 ஆந் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் கீழே குறிக்கப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு,
இலக்கம் 500, டீ. பீ. ஜாயா மாவத்தை,
கொழும்பு 10.

(ஆ) மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்

படிவத்தை ஏ4 (துட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் தயாரித்து தமது கையெழுத்தின் மூலம் பூரணப்படுத்துதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண அதிகாரி/ சட்டத்தரணி/ பிரசித்தி நொத்தாரிசு/ முப்படையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் அல்லது 2,73,060 ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை வருடாந்தம் திரட்டுச் சம்பளமாகப் பெறும் அரசின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) தற்சமயம் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றும் அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் பணியாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் மூலம் முன்வைக்க வேண்டும்.

(ஊ) இத்துடன் காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு முரணான விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போவது அல்லது தாமதமாகக் கிடைத்தல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்.**- ஆட்சேர்ப்புக்கு முன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் பொய்யானது அல்லது பிழையானதென நிருபிக்கப்பட்டால் அவ்விண்ணப்பதாரியினது வேட்பு நிலை நிராகரிக்கப்படும்.

அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப் புக்குப் பின் நிருபிக்கப்பட்டால் அது தொடர்பில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைக்கு உட்பட்டதாக பணியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

* நியமனம் செயற்படுத்தப்படுகின்ற திகதி மற்றும் நியமிக்கப் படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். ஏதாவது பதவி வெற்றிட எண்ணிக்கைக்கு அல்லது அனைத்து பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

* இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி சொற்றொடர்களுக்கிடையில் ஒவ்வாமை காணப்பட்டால் சிங்கள மொழி சொற்றொடர் செல்லுபடியாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆணைப்படி,

செயலாளர்,
நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள
முகாமைத்துவ அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு**

சட்ட அலுவலர் பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.
(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
4. தொலைபேசி இலக்கம் :----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. ஆணா/பெண்ணா என்பது :----.
7. பிறந்த திகதி :
ஆண்டு ------ மாதம் ------ திகதி ------
8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் ------ மாதங்கள் ------ நாட்கள் ------
9. இனம் :----.
10. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :----.
11. சட்டத்துறைப் பட்டம் தொடர்பான விபரம் :-
பல்கலைக்கழகம் :----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
மொழிமூலம் :----.
12. சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.
13. சட்டத்தரணியாகப் பெற்ற தொழில் அனுபவம் :----.
வருடங்களின் எண்ணிக்கை :----.
14. ஏனைய கல்வித் தகைமைகள் :-

(i) ------
(ii) ------
(iii) ------

15. மொழித் தேர்ச்சி (குறித்த கூட்டினுள் ✓ அடையாளத்தை இடவும்.) :

| | மிக நன்று | நன்று | மத்திமம் | நலிவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை**

............................................ ஆகிய நான் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். நான் அரச பணியிலிருந்து விலக்கப்பட்டு அல்லது மனிதாபிமான மாற்று வழியாக வினைத்திறனின்மை காரணமாகப் பணியிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்படவில்லை எனவும், பதவியைக் கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை என நான் தெரிவுசெய்யப்படு வதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகுதியற்றோனாக ஆக்கப்படுவதாக

வும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய நிலை நிருபிக்கப் பட்டால் எவ்வித நட்ட ஈடுமின்றி பணியிலிருந்து விலக்கப்படலாமெனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./ திருமதி/ செல்வி ........................................ தற்போது இவ் அமைச்சில்/திணைக்களத்தில் ......................................... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய அலுவலர் ஒருவராக சேவை செய்கின்றார் என்றும் இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

10-361

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் மா அதிபதியின் அலுவலக பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறை பணிப்பாளர் மா அதிபதியின் அலுவலகத்தில் இங்கு கீழ்க்குறிப்பிடப் படும் பதவிக்கு தகைமைபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடமாகியுள்ள பதவி :**

| பதவியின் பெயர் | ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் | பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| துறைமுக அரச கட்டுப் பாட்டாளர் (கப்பல் தளம்) | தரம் 1 | 01 |

1. இந்த அறிவித்தலில் "அமைச்சின் செயலாளர்" என்னும்போது கப்பற்றுறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளராவார்.

2. நியமனம் செயல்வலுவுக்கு வரும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

3. **தகைமைகளும் அனுபவமும் :**

| பதவி | கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|---|
| துறைமுக அரச கட்டுப் பாட்டாளர் (கப்பல்தளம்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது ஹொங்கொங் அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருபக்க ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்றுறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கப்பல் தலைவர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். | தனி எடை 3,000 தொன் கொண்ட கடற் பிரயாணத்தில் ஈடுபடும் வணிகக் கப்பல் ஒன்றில் பிரதான தலைவராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருடகால அனுபவம் இருத்தல். |

*உடற்தகுதி*.- விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவ தற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதலும் வேண்டும்.

*பிற தகைமைகள் :-*

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற் குத் தேவையான அடிப்படைத் தகைமைகளை எல்லாவிதத் திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அவ்வாறு அடிப் படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரர் களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- இந்தப் பதவிக்கு 6/2006 ஆம் இலக்க முடைய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூ. 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050 - ரூ. 53,555 (எஸ்எல்-1-2006) கொண்ட சம்பள அளவுத்திட்டம் உரியதாவதோடு, இந்த சம்பள அளவுத்திட்டத் தின் 20 ஆம் படிநிலையில் (ரூபா 36,755) அமர்த்தி சம்பளம் வழங்கப்படும்.)

5. **வயதெல்லை**.- 30 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

6. **ஆட்சேர்ப்புத் திட்டம்.**- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் தகைமைகள் பரிசீலனை செய்யப்பட்டு, பின்வரும் புள்ளித் திட்டத்திற்கு அமைவாக புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் திறமை அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

| | | பரிசீலனை செய்து புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள் | | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| பதவி | துறைமுக அரச கட்டுப் பாட்டாளர் (கப்பல் தளம்) | | | |
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | | | 30 |
| | (அ) | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல், விஞ் ஞானம், வணிகம், முகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் கொள்வனவு முகாமைத்துவம் அல்லது கப்பற் றுறை போன்ற துறைகளுக்குரிய தான பட்டப்பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல் | (30 புள்ளிகள்) | |
| | (ஆ) | மேற்குறிப்பிட்ட துறைகளின்கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப் பின் படிப்பு டிப்ளோமா | (20 புள்ளிகள்) | |
| | (இ) | மேற்குறிப்பிட்ட துறைகளின்கீழ்,<br>- முதலாவது வகுப்பு பட்டம்<br>- இரண்டாம் வகுப்பு உயர்மட்ட பட்டம்<br>- இரண்டாம் வகுப்பு கீழ்மட்ட பட்டம் | (18 புள்ளிகள்)<br>(15 புள்ளிகள்)<br>(12 புள்ளிகள்) | |
| 2. | கல்வித் தகைமைகள் | | | 10 |
| | பதவிக்குரிய துறையில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட- | | | |
| | (அ) | ஒரு வருடத்துக்கான டிப்ளோமா பாடநெறியொன்றைக் கற்று அதனை நிறைவு செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் (மேலதிகக் கல்வித் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப் படாத தகைமைகளுக் காக மாத்திரம்) | (10 புள்ளிகள்) | |
| | (ஆ) | ஆறு (06) மாத காலத் துக்கான பாடநெறி யொன்றைக் கற்று அதனை நிறைவு செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் (மேலதிகக் கல்வித் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப் படாத தகைமைகளுக் காக மாத்திரம்) | (5 புள்ளிகள்) | |
| 3. | மேலதிக அனுபவம் | | | 30 |
| | | ஆட்சேர்ப்புச் செய்வ தற்கான தகைமை களின் கீழ் குறிப் பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத் திற்கு மேலான அனு பவம் பெற்றுள்ள காலப்பகுதிக்கு (ஆண்டொன்றுக்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக ஆறு (06) வருடங் களுக்கு) | | |
| 4. | துறைசார்ந்த பங்களிப்பு (வெளியீடுகளும் புதிய கண்டுபிடிப்புகளும்) | | | 10 |
| 5. | கணனி ஆற்றல் (ஆகக் கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | | 15 |
| | (அ) | பட்டம்/பட்டப்படிப் பில் பாடமொன்றாக கணனி/தகவல் தொழில்நுட்பம் பாடத்தில் சித்தி யடைந்திருத்தல் | (15 புள்ளிகள்) | |

| | பரிசீலனை செய்து புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள் | | | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| | (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணனி தொடர்பான ஒரு வருட அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான டிப்ளோமா/ சான்றிதழ் | (12 புள்ளிகள்) | |
| | (இ) | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணனி தொடர்பான ஆறு (06) மாத அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான டிப்ளோமா/ சான்றிதழ் | (10 புள்ளிகள்) | |
| | (ஈ) | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணனி தொடர்பான டிப்ளோமா/ சான்றிதழ் | (08 புள்ளிகள்) | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | | | 5 |
| | | | | 100 |

**7. சேவை நிபந்தனைகள்**.- (i) வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை.- தரம் 1 இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 5 வருட காலத்திற்குள் 1 ஆம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை முறை - எழுத்துமூலப் பரீட்சை

(ii) அரச கரும மொழித் தேர்ச்சி :

| | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| 1. அரச கரும மொழி | அரச கரும மொழியல்லாத மற்றைய மொழி மூலம் ஒன்றில் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் அரச கரும மொழியொன்றில் தேர்ச்சியினை தகுதிகூர் காலப்பகுதியுள்ளும் மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்து ஆறு (06) வருட காலத்திற்குள்ளும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| 2. மற்றைய அரச கரும மொழி | 07/ 2007 மற்றும் அதற்கு இடை நேர்விளைவான பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் பிரகாரம் 1 ஆம் மட்ட தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும். |

(iii) இந்தப் பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்படல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் 3 வருடங்களைக் கொண்ட தகுதிகூர் நிலைக்கு உட்படுத்தப்படும்.

(v) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களின் நியமனம் சம்பந்தமாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்டதும் 1589/ 30 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நடைமுறை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக சேவையின் I ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(vi) சகல ஆட்சேர்ப்புகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும் எதிர்காலத்தில் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்குச் செய்யப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படும்.

**8. விண்ணப்பிக்கும் முறை**.- (i) இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப் பங்கள் பதிவுத்தபாலில் 2013.11.11 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் ''பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதியின் அலுவலகம், இலக்கம் 43/ 89, பிறிஸ்ரல் கட்டிடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 1'' என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர் களுடைய விண்ணப்பங்களை இயைபுள்ள திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குப் புறம்பான விடயங்கள் தொடர்பிலான தீர்மானங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

ஆர். டபிள்யூ. பேமசிரி,
செயலாளர்,
துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு.

துறைமுக அலுவலகம்,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 1,
2013, ஒற்றோபர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு

வணிகக் கப்பல் துறைப் பணிப்பாளர் நாயகம் அலுவலகத்தின் துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்) பதவி

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. பிறந்த திகதி :----.
2013.10.11 ஆந் திகதியன்று வயது-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
4. இனம் :----.
5. கல்வித் தகைமைகள் :----.
6. தொழில் தகைமைகள் :----.
7. தொழில் மற்றும் பயிற்சி தொடர்பான விபரங்கள் :----.
8. தற்போதைய தொழில் :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது நியமனம் வழங்க முன்னர் உண்மையற்றவையென அல்லது பிழையானவையெனத் தெரியவந்தால் அதன் காரணமாக நான் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இந்தத் தவறு தெரியவந்தால் எந்தவித நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-393

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்ப உத்தியோகத்தர்/ஆய்வுகூட உதவியாளர்/பண்ணை முகாமையாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தில் நிலவுகின்ற கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிவர்த்திப்பதற்குப் பொருத்தமான தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| | | |
|---|---|---|
| 1 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/இயந்திரவியல்) | 08 |

| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
|---|---|---|---|
| 2 | ஆய்வுகூட உதவியாளர் | 37 | 08 |
| 3 | பண்ணை முகாமையாளர் | 02 | - |

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2013.11.11 என்பதோடு, ஒவ்வொரு பதவிக்கும் உரியவாறு இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**3. ஒவ்வொரு பதவிக்கும் உரிய தகைமைகளும் ஏனைய ஏற்பாடுகளும் பின்வருமாறு :**

(அ) **தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் (சிவில்/இயந்திரவியல்) :**

(i) கல்வித் தகைமைகள் :

(1) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வேறேதேனும் ஒரு பாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(2) க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் விஞ்ஞான/கணித பிரிவில் ஒரே தடவையில் பொருத்தமான இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக. சகல பாடங்களிலும் (பொது உளச்சார்பு தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

(ii) *தொழில்சார் தகைமைகள்.-* மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு இணங்க, தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்துக்கான சான்றிதழை கீழ்குறிப்பிட்டதற்கமைய பதவிக்கு ஏற்புடையவாறு பெற்றிருத்தல் வேண்டும் :-

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா ;

அல்லது

(2) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(3) உயர் கல்வி அமைச்சின்கீழ் இணைக்கப்பட்ட இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(4) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் முதலாவது பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

(5) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழை வழங்கக்கூடிய நிறுவனங்களிடம் விசாரித்து கருத்துக்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல வகைகளிலும் சமமானதென இலங்கை தொழில்நுட்பவியல் சேவைச்சபை அங்கீகரிக்கத்தக்க வேறு தொழில்நுட்பவியல் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(iii) *சேவை அனுபவம்.-* குறித்த துறையில் சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(iv) *சம்பளம்.-* பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (IV) இற்கு இணங்க, சம்பளக் குறியீட்டு இலக்கம் : எம்என்-3-2006(ஏ)
*சம்பள அளவுத்திட்டம்.-* ரூபா 15,005-4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885.

(v) *வயதெல்லை.-* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(vi) *ஆட்சேர்ப்பு முறை.-* எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். முதலாவதாக எழுத்துப் பரீட்சை நடைபெறுவதோடு, அந்த பரீட்சையில் திறமை மற்றும் உயர் புள்ளிகளுடன் சித்தியடையும் அடிப்படையில் விண்ணப்பதாரர்களிடையே இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான தொகையினர் இணைத்துக்கொள்ளப்படுவர்.

**எழுத்துப் பரீட்சை :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | காலம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தி அடைவ தற்கான புள்ளித் தொகை | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|
| 1. பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தை பரீட்சித்தல் | 1 மணித்தியாலம் | 100% | 40% | சமகால சமூக நிகழ்வுகள் தொடர்பான தெளிவு, சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு, புத்தாக்க சிந்தனைச் சக்தி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திறமை, பகுப்பாய்வு செய்வதற்கான திறமை மற்றும் நேர்முகாமைத்துவம் போன்றவற்றை பரீட்சிப்பதற்கான குறுகிய வினாப் பத்திரம் |

| வினாப்பத்திரத்தின் பெயர் | காலம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தி அடைவ தற்கான புள்ளித் தொகை | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|
| 2. தொழில்நுட்வியல் மற்றும் விடயதானம் தொடர்பான அறிவு | 3 மணித்தியாலம் | 100% | 40% | பதவிக்குப் பொருத்தமான தொழில்நுட்ப வியல் அறிவு மற்றும் விடயதானம் தொடர்பான அறிவு போன்றவற்றை மதிப்பிடுவதற்கான 8 வினாக்களில் 5 வினாக்களுக்கு விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படுவதற்கான பிரதான தலைப்பு | வழங்கப்படும் அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 15 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 25 |
| அனுபவம் | 30 |
| கணனி அறிவு | 15 |
| ஆங்கில மொழித் தேர்ச்சி | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

(ஆ) ***ஆய்வுகூட உதவியாளர் :***

(i) *கல்வித் தகைமைகள் :*

(1) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வேறேதேனும் ஒரு பாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

(2) க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் சகல பாடங்களிலும் (பொது உளச்சார்பு தவிர) சித்தியடைந்து மூன்றாம் நிலைக் கல்விப் பாடநெறியொன்றைத் தொடர்வதற்குத் தேவையான தகுதி மட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (3) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

(ii) *தொழில்சார் தகைமைகள்.-* மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்ஒன்றில் தேசிய தொழில் தகைமை (NVQ) 6 ஆம் மட்டத்தில் தொழில்நுட்பவியல் துறைசார் பாடநெறியொன்றைப் பூர்த்திசெய்து அதற்கான சான்றிதழையும் பெற்றிருத்தல்.

(iii) *சேவை அனுபவம்.-* அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் குறித்த துறையில் இரண்டு வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(iv) *சம்பளம்.-* பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (IV) இற்கு இணங்க, சம்பளக் குறியீட்டு இலக்கம் : எம்ரீ-2-2006(ஏ)
*சம்பள அளவுத்திட்டம்.-* ரூபா 14,570 - 10 x 170 - 11 x 180 - 6 x 240 - 14 x 320 - ரூபா 24,170.

(v) *வயதெல்லை.-* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(vi) *ஆட்சேர்ப்பு முறை.-* எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். முதலாவதாக எழுத்துப் பரீட்சை நடைபெறுவதோடு, அந்த பரீட்சையில் பெறப்படும் திறமை மற்றும் உயர் புள்ளிகள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களிடையே இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான தொகையினர் இணைத்துக்கொள்ளப்படுவர்.

**எழுத்துப் பரீட்சை :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | காலம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தி அடைவ தற்கான புள்ளித் தொகை | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|
| 1. பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தை பரீட்சித்தல் | 1 மணித்தியாலம் | 100% | 40% | சமகால சமூக நிகழ்வுகள் தொடர்பான தெளிவு, சர்வதேச நிகழ்வுகள் தொடர் பான அறிவு, புத்தாக்க சிந்தனைச் சக்தி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திறமை போன்றவற்றை பரீட்சிப்பதற்கான குறுகிய வினாப்பத்திரம் |
| 2. தொழில்நுட்பவியல் | 2 மணித்தியாலம் | 100% | 40% | பதவிக்குப் பொருத்தமான தொழில்நுட்ப வியல் அறிவை பரீட்சிப்பதற்காக தயா ரிக்கப்பட்ட வினாக்களில் 5 வினாக்க ளுக்கு விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படுவதற்கான பிரதான தலைப்பு | வழங்கப்படும் அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 20 |
| மேலதிக அனுபவம் | 30 |
| ஆங்கில மொழித் தேர்ச்சி | 10 |
| கணனி திறமை | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

(இ) ***பண்ணை முகாமையாளர் :***

(i) *கல்வித் தகைமைகள் :*

(1) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறேதேனும் இரு பாடங்கள் உட்பட ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) *தொழில்சார் தகைமைகள் :*

(i) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்ட விவசாயத் துறையில் பாடநெறியொன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) குண்டசாலை, அங்குணுகொலபெலெஸ்ஸ மற்றும் பெல்வெஹெர போன்ற ஏதேனும் ஒரு விவசாயக் கல்லூரியால் வழங்கப்படும் விவசாய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றை கொண்டிருத்தல் ;

அல்லது

(iii) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் இரண்டு வருட பயிற்சியின் பின் பெற்றுக்கொள்ளப்பட்ட விவசாயம் தொடர்பான தேசிய சான்றிதழ்/டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(iv) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் விவசாய விஞ்ஞான டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(v) அகுவைனாஸ் கல்லூரியால் வழங்கப்படும் விவசாய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

(iii) *சேவை அனுபவம்.-* அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாய தொழில்நுட்பத் துறை நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்துக்குக் குறையாத சேவைக்கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(iv) *சம்பளம்.-* பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (IV) இற்கு இணங்க, சம்பளக் குறியீட்டு இலக்கம் : எம்ரீ-1-2006(ஏ)
*சம்பள அளவுத்திட்டம்.-* ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 6 x 240 - 14 x 320 - ரூபா 23,665

(v) *வயதெல்லை.-* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.)

(vi) *ஆட்சேர்ப்பு முறை.-* எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். முதலாவதாக எழுத்துப் பரீட்சை நடைபெறுவதோடு, அந்த பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் திறமை மற்றும் உயர் புள்ளிகள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களிடையே இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான தொகையினர் இணைத்துக்கொள்ளப்படுவர்.

**எழுத்துப் பரீட்சை :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | காலம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தி அடைவ தற்கான புள்ளித் தொகை | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|
| 1. பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தை பரீட்சித்தல் | 1 மணித்தியாலம் | 100% | 40% | சமகால சமூக நிகழ்வுகள் தொடர்பான தெளிவு, சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு, புத்தாக்க சிந்தனைச் சக்தி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திறமை பகுப்பாய்வு செய்வதற்கான திறமை போன்றவற்றை பரீட்சிப்பதற்கான குறுகிய வினாப்பத்திரம் |
| 2. தொழில்நுட்வியல் அறிவு | 2 மணித்தியாலம் | 100% | 40% | பயிர் உற்பத்தி, பூச்சிக்கட்டுப்பாடு, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு, இணைந்த விவசாயம், கால்நடை விலங்குகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் மீன் தொழில் துறை போன்ற துறை சார்ந்த வினாக் களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரம் |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படுவதற்கான பிரதான தலைப்பு | வழங்கப்படும் அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 20 |
| மேலதிக அனுபவம் | 30 |
| மொழித் தேர்ச்சி | 10 |
| கணனி திறமை | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

4. மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் சகலரும் விசேட இயல்பையும் சிறந்த தேகாரோக்கியத்தையும் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கு முடியுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

5. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்.-** (i) இங்கு கீழே குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப, ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம், த. பெ. இலக்கம் 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2013.11.11 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க

மேல் மூலையில் "....................................................... (குறித்த பதவியை குறிப்பிடல் வேண்டும்.) பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தை தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தனித்தனியாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

(iv) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) ஒரு பதவிக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா ........................................ ஆக இருப்பதோடு, ஒவ்வொரு பதவிக்காகவும் வேறு வேறாக பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள நகரக் கிளையின் 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கிக் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய பகுதியில் கழன்றுவிடாமல் ஒட்டவேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு, காசுக்கட்டளை மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(vi) அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், விண்ணப்பதாரியின் பிரிவுக்கான கிராம அலுவலர், சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர்/2,40,360 ரூபாவை அல்லது அதற்கு அதிகமான தொகையின் வருடாந்த திரட்டிய சம்பளமாகப் பெறும் அரச சேவையின் நிரந்தர பதவிநிலை அலுவலர் ஒருவர்/பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது பிரதம மதகுரு/ஏனைய வணக்கஸ்தலங்களுக்குப் பொறுப்பான மதகுரு ஒருவர் மூலம் விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள், அவர்களது திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(viii) பரீட்சை அனுமதி அட்டையை விண்ணப்பதாரிகளுக்கு அனுப்புவதற்காக, விண்ணப்பதாரியின் முகவரி குறிப்பிடப்பட்டு 30 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 23 செ. மீ. x 10 செ. மீ. அளவான கடித உறையொன்றும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ix) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரர்களின் அபேட்சகத் தன்மை இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான தகவல்கள் ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவருமிடத்து சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(x) திணைக்களத்திலுள்ள எவருடைய பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக் கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதாவது விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாக கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. அதேவேளை, விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது.

6. **அரச மொழிக்கொள்கையை அமுலாக்கல்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் : 07/2007 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குறித்த மட்டத்தில் ஏனைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை சேவையில் இணைந்த ஐந்து (5) வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.**- (i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை/அநாதை/தாரமிழந்தவர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) குறிப்பிடப்படுவதற்கு அமைய இந்த திணைக்களத்திற்கு உட்பட்ட எந்தவொரு தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள், பதவிகளுக்கு உரித்தான தற்போதைக்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கும், வருங்காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் அரசின் அல்லது பொறுப்பான அமைச்சின் அல்லது தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளரினால் வெளியிடப்படும் சட்டம் மற்றும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1589/30 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட பொது நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கும் பொருத்தமானதாகும்.

*8.* **பரீட்சை ஒழுங்குவிதிகள்**.- (i) ஒழுங்கான முறையில் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்கு வழங்கப்பட்ட மத்திய நிலைய பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்த கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காக,

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ; அல்லது
(ஆ) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழி ஆகிய இரு மொழிமூலத்திலும் மட்டுமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்களை கோருவதற்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளுக்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி குறித்த தினத்திற்கோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது, தகைமைகள் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாக கவனத்தில் கொள்ளப்படாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இந்தப் பரீட்சை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பின் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

*9.* வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் நிரப்புவதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

எஸ். பாலசுப்பிரமணியம்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
18.09.2013.

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் .................................. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2

1. விண்ணப்பதாரரின் பெயர் :

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : SILVA, A.B.C.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

(i) அலுவலக விலாசம் :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) தனிப்பட்ட விலாசம் :----.
தொலைபேசி இலக்கம் :----.
(விலாசம் அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. பிறந்த திகதி :

வருடம் ---- மாதம் ---- திகதி ----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :
திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன :----.

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் ---- சுட்டிலக்கம் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :
வருடம் ---- சுட்டிலக்கம் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | பெறுபெறு | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

*10.* சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவைக்காலம் | அரசாங்கத் துறை/இடைநிலை அரசாங்கத் துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

*11.* கீழே குறிப்பிடப்படும் பாடங்களில் சித்தியடைந்த உயர் பரீட்சை :
சிங்களம் :----.
தமிழ் :----.
ஆங்கிலம் :----.

*12.* (i) நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா/பதிவுசெய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :----.

(பதிவு செய்ததன் மூலம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

(ii) இனம் :
சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இலங்கை முஸ்லிம்-3, இந்திய வம்சாவளியினர்-4, வேறு-5 ☐
(அடைப்பினுள் உரிய இலக்கத்தை குறிப்பிடவும்)

*13.* நீர் அரசாங்கப் பதவி ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :----.

*14.* தற்போது அரசாங்க சேவையில் இருப்பின் உமக்கு எதிராக திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் ஏதேனும் உள்ளதா ? : ----.

*15.* நீர் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

*16.* பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளை :----.

பணம் செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவந்தால் எனக்கு எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*(இப்பகுதியானது, அரச தொழிலில் உள்ளவர்களுக்கு மட்டும்)*

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தில் ............................................ பதவிக்காக விண்ணப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி .................................................. அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ..................................................... பதவியில் பணிபுரிபவர்/ பயிலுனராக கடமையாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

*10-323*

## வெளிவிவகார அமைச்சு

### இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆம் 2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை – 2012 (2013)

மேற்படி சேவையிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை 2013, திசெம்பர் மாதத்தில் கொழும்பிலும், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் நடாத்தப்படும். வாய்மொழிப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

2. இரு வினைத்திறன் தடைகாண் இரு பரீட்சைகளுக்கும் ஒரே நேரத்தில் பரீட்சார்த்திகள் தோற்றும் வகையிலான கால அட்டவணை தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்**.- முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை நிருவகிக்கின்ற பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் உரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் மொழிப் பரீட்சைக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு "அ" இல் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இன்னும் இலங்கை வெளிநாட்டு சேவை தொடர்பில் காணப்படும் முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளுக் கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு "ஆ" இல் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

அலுவலர்களின் விருப்பின் பேரில் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளின் பாடங்களுக்கு ஒரு தடவை அல்லது பல தடவைகள் தோற்ற அவர்கள் அனுமதிக்கப்படுவர். இரண்டாம் மொழிப் பரீட்சைக் குத் தோற்றிய அலுவலர்களுக்கான வாய் மொழிப் பரீட்சைகளை அதே இடத்தில் அதே நேரத்தில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

4. பாடங்கள் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

#### 1-வது வினைத்திறன் தடைகாண் பரீட்சை

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| பகுதி I | | |
| 01 | நிதியியல் | 3 |
| 02 | இலங்கையின் வரலாறும் புவியியலும் | 3 |
| பகுதி II | | |
| 03 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 04 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 05 | சர்வதேச விவகாரங்கள் | 3 |
| 06 | இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளி விவகார அமைச்சின் ஒழுங்கு விதிகள் மற்றும் கணனி அறிவு | 3 |

#### 2-வது வினைத்திறன் தடைகாண் பரீட்சை

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| பகுதி I | | |
| 21 | இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும் | 3 |
| 22 | நிருவாகம் | 3 |
| | (அ) அலுவலக நடை முறைகளும் நிறுவன முறைமைகளும் | |
| | (ஆ) தாபனக் கோவை (தொகுதி I மற்றும் தொகுதி II) | |
| பகுதி II | | |
| 23 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 24 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 25 | சர்வதேச விவகாரங்கள் | 3 |

**வெளிநாட்டு மொழிகள் :**

| | | |
|---|---|---|
| 07 | அரபு மொழி | 2 |
| 08 | பிரஞ்சு மொழி | 2 |
| 09 | ரஷ்சிய மொழி | 2 |
| 10 | ஸ்பானிய மொழி | 2 |
| 11 | ஹிந்தி மொழி | 2 |
| 12 | சீன மொழி | 2 |
| 13 | ஜேர்மன் மொழி | 2 |
| 14 | யப்பான் மொழி | 2 |
| 15 | ஆங்கில மொழி | 2 |
| 16 | கொறியன் மொழி | 2 |

**இரண்டாம் மொழிகள் :**

| | | |
|---|---|---|
| 30 | சிங்களம் (எழுத்து மூலம்) | 2 |
| 31 | தமிழ் (எழுத்து மூலம்) | 2 |
| 32 | ஆங்கிலம் (எழுத்து மூலம்) | 2 |
| 33 | சிங்களம் (வாய்மொழி மூலம்) | |
| 34 | தமிழ் (வாய்மொழி மூலம்) | |
| 35 | ஆங்கிலம் (வாய்மொழி மூலம்) | |

5. இவ்வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்களின் கவனம் கீழே மீளவெளியிடப்பட்டிருக்கும் 1996.09.04 ஆந் திகதிய 701 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின்பால் ஈர்க்கப்படுகின்றது.

"திணைக்களப் பரீட்சை (பதவியுயர்வு மற்றும் வினைத்திறன் தடைகாண் பரீட்சை உட்பட) பதவியுயர்வுப் பரீட்சை இன்னும் வினைத்திறன் தடைகாண் பரீட்சை ஆகியவற்றுக்கான மொழி மூலமானது ஊழியர்கள் அரசாங்க சேவைக்கு உள்ளாகும் பொருட்டு போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும். மேலும் போட்டிப் பரீட்சையின்றி

அடிப்படை ஆட்சேர்ப்பு நிகழ்ந்திருக்கும் பட்சத்தில் பதவியுயர்வு/ வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான மொழி மூலமானது அலுவலர் அரசாங்க சேவைக்கு உள்ளாக தகைமை பெற்ற மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும்.

5.1 பரீட்சை முடிவுகள் வழங்குதல்.- பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு குறைந்தது 40% மான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். முதலாவது, இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளுக்குரிய தனிப்பட்ட பரீட்சார்த்தி களது பெறுபேறடங்கிய இரு வெவ்வேறான பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரங்கள் பரீட்சைகள் ஆணையாளரினால் வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

6. பரீட்சார்த்திகள் வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் வகையில் பிற நாட்டு மொழிகள் தவிர சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வினாத்தாள்களைத் தயாரிக்க பரீட்சைகள் ஆணையாளரினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உரித்தற்ற மொழி மூலம் ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என பின்னர் கண்டு பிடிக்கப்படுமிடத்து அவரது பரீட்சார்த்தித்தன்மை இரத்துச் செய்யப்படும்.

8. பரீட்சார்த்திகள் ஏ4 அளவான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இதனுள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பங்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் 1 தொடக்கம் 8 வரை முதல் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலுமாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். உரிய விபரங்கள் தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது தலையங்கத்தில் கூறப்பட்ட பரீட்சையின் பெயர் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இருத்தல் வேண்டும். இரு பரீட்சைகளுக்குமாகத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பரீட்சை தொடர்பிலும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

9. பரீட்சைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கின்ற நிபந்தனைகள், ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

10. அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு 2013, நவெம்பர் 1 ஆந் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்கக்கூடிய வகையில் வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டு நிருவாகப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணிபுரிபவர்கள் தமது விண்ணப்பங்களை தூதரகத் தலைவருக்கு ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதிற்குப் பின்னர் கிடைக்கும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

11. விண்ணப்பங்களை சரிவரப் பூர்த்திசெய்து சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். குறித்த நேரத்தில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவம் மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்பிரதிகளுடன் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு தொலைநகல் மூலம் முறைப்பாடு செய்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதி அட்டையின் நிழற்பிரதியொன்றை அனுப்புவதற்காக வசதியாக அம்முறைப்பாட்டில் தொலைநகல் இலக்கமொன்றை அங்கு குறிப்பிடுதல் சிறந்தது.

12. மேற்படி 11 ஆம் பந்தியில் கூறப்பட்ட தேவைப்பாடுகளை அனுசரிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் கடிதத் தொடர்புகள் எவையும் பரீட்சைக்குப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

13. பின்வரும் ஆவணங்கள் பரீட்சை நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருக்கும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

14. முதல் தடவை இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணங்கள் விலக்களிக்கப்படுவதுடன் ஏனைய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் பின்வருமாறு அமையும்.

(அ) முதலாவது அமர்வு (முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் பாகத்திற்கு) கட்டணம் இலவசம்
(ஆ) அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அமர்வுக்கும்

| | ரூ. ச. |
|---|---|
| முழுப்பரீட்சைக்கும் | 1,000.00 |
| ஒரு பாடத்திற்கு | 500.00 |
| வாய்மொழிமூலப் பரீட்சை | 300.00 |

கட்டணங்கள் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பிற்கு செலுத்தப்படும் வண்ணம் எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலக காரியாலயத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச் சீட்டு விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டப்பட வேண்டும்.

பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தன்னிடத்தில் வைத்துக்கொள்வது சிறந்தது.

15. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயமேதும் சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதாகும். பரீட்சையைப் பொறுத்தவரையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாகும்.

கருணாதிலக அமுனுகம,
செயலாளர்,
வெளிவிவகார அமைச்சு.

வெளிவிவகார அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2013, செத்தெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெளிவிவகார அமைச்சு**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலகர்களுக்கான 1 ஆம் 2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள்-2012 (2013)**

**1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers in Sri Lanka Foreign Service-2012 (2013)**

மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)

1. (அ)(i) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர்:- ..................
(சிங்களத்தில்/தமிழில்)

(ii) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர்:- ...............
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில். கடைசிப் பெயருக்குப் பின்னால் முதலெழுத்துக்களை எழுதவும். உ-ம் : SILVA, A.B.)

(ஆ) (i) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள்:- .................
(சிங்களத்தில்/தமிழில்)

(ii) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள்:- ...............
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2. முகவரி:----.
(பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்புவதற்காக)
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

3. பிறந்த திகதி:-

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

4. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-

| | | | | | | | | | |

5. பால் :-
ஆண் -0, பெண் -1

(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)

6. இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனத் திகதி:-

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

7. தற்போது வகிக்கும் பதவி:................

8. விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் :

| பரீட்சை | உரிய இல. |
|---|---|
| வி.த.கா.1 | 1 |
| வி.த.கா.2 | 2 |
| இரண்டாம் மொழி | 3 |
| வெளிநாட்டு மொழி | 4 |

(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)

9. அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விண்ணப்பிக்கும் பரீட்சைக்குரிய பாட எண்களைச் சுட்டிக்காட்டி தோற்றும் பாடங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (விண்ணப் பத்தில் குறித்துக் காட்டப்பட்ட பாடங்களைத் தவிர ஏனைய பாடங்களுக்குத் தோற்ற பரீட்சார்த்தி அனுமதிக்கப்பட மாட்டார்.)

| பாடம் | பாட எண் |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |
| (vi) | |

10. பரீட்சார்த்தி முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு முன்னர் தோற்றியிருந்தாரா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறெனில் பரீட்சைச் சுட்டெண், பாடங்கள், வருடம் மற்றும் மாதம் என்பவற்றைக் குறிப்பிடுக :----.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிமொழிவதுடன் மேலே குறித்துக் காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்கு நான் தோற்றத் தகுதியுடையவனாக உள்ளேன் எனவும் உறுதி கூறுகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கூறப்படும் சட்டதிட்டங்களுக்கு உடன்படுகின்றேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான ........................... ஆம் இலக்கப் பற்றுச் சீட்டும் இணைக்கப்பட்டுள்ளது.

செலுத்திய கட்டணம்:- ரூபா :----------.

----,
விண்ணப்பதாரர் கையொப்பம்

திகதி:----.

பற்றுச்சீட்டு மூலப்பிரதி இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கப்படுகின்றது.

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும் விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி .......................

என்பவரினால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியுடையவர் என உறுதிப்படுத்துவதுடன் அவரது கையொப்பத்தையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பமும்
பதவி முத்திரையும்

திகதி:----.

### பின்னிணைப்பு 'அ'

**சிங்களம்.**- சிங்கள மொழியிலான பரீட்சை, எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்து மூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும். இப்பரீட்சையில் சித்தியடைய 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை இவ்வினாப்பத்திரத்தில் பரீட்சார்த்திகள் பெற்றிருத்தல் வேண்டும். வினாப்பத்திரமானது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும் :-

(i) இலக்கணம்.
(ii) சிங்களத்தில் எழுதப்பட்ட மனுக்கள் அல்லது கிராம உத்தியோகத்தரின் அறிக்கைகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்.
(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலக ஆவணமொன்றை சிங்களத்திற்கு மொழிபெயர்த்தல்.

வாய்மொழி மூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும் :-

(i) சிங்களம் பேசும் ஒருவர் விளங்கி எழுதக் கூடிய வகையில் ஆங்கிலத்தில் இருப்பதான அலுவலக விடயமொன்றை சிங்களத்தில் உரைபெயர்த்து விளக்கிக் கூறல்.
(ii) சிங்களத்திலுள்ள மனுவொன்றை வாசித்தல்.
(iii) உரையாடலும் உரைபெயர்ப்பும்:- இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்றவர்களால் பேசப்படும் சிங்கள மொழியை பரீட்சார்த்திகள் புரிந்துகொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**தமிழ்.**- தமிழ் மொழியிலுள்ள பரீட்சை, எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்து மூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும். பரீட்சார்த்திகள் சித்தியடைய 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை இவ்வினாப்பத்திரத்தில் பெறுதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாக அது அமையும் :-

(i) இலக்கணம்.
(ii) தமிழில் எழுதப்பட்ட மனுக்கள் அல்லது கிராம உத்தியோகத்தரின் அறிக்கையை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்.
(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலகக் கடிதம் அல்லது ஆவணத்தின் பகுதியை தமிழிற்கு மொழிபெயர்த்தல்.

வாய்மொழி மூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:-

(i) தமிழ் பேசும் ஒருவர் விளங்கி எழுதக் கூடிய வகையில் ஆங்கிலத்தில் இருப்பதான அலுவலக விடயமொன்றை தமிழில் மொழிபெயர்த்து விளக்கிக் கூறுதல்.
(ii) தமிழிலுள்ள மனுவொன்றை வாசித்தல்.
(iii) உரையாடலும் உரைபெயர்ப்பும்:- இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்றவர்களால் பேசப்படும் தமிழ் மொழியை பரீட்சார்த்திகள் புரிந்து கொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**ஆங்கிலம்.**- ஆங்கில வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் பரீட்சார்த்திகள் சித்தியடைய 40% புள்ளிகளையேனும் இவ்வினாப்பத்திரத்தில் பெறுதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாக அது அமையும் :-

(i) இலக்கணம்
(ii) கிரகித்தல்
(iii) சுருக்கியெழுதுதல்
(iv) அறிக்கை மற்றும் கடிதம் எழுதுதல்
(v) சொல்வளம்

பரீட்சார்த்திகளின் தகவல்களுக்காக வினாத்தாள்களின் மாதிரியொன்று கீழே தரப்படுகின்றது :-

### Part A

(a) Fill in the blanks with the correct form of the verb given within brackets :-

During the last war our country …………1 (be) a British Colony …………….2 (take) a full part in the war effort. Consequently our tea, rubber and coconut ……….. 3 (ship) to Britain at very favourable prices and the foreign exchange we …………. 4 (earn) ……………5 (accumulate) as assets. Again during the Korean war in the early fifties our products ………….. ……………..7 (not have) any exchange problem. However, political independence ……….. 8 (not given rise) to any effort to ……………9 (build up) our economy we ……………….10 (be) a nation of consumers and we ……………11 (Squander) our foreign exchange on consumer goods which ……………….. 12 (can produce) locally and incidentally diversified our economy. Over the last decade we ………… 13 (begin) to feel the pinch when our primary products …………… 14 (fail) to command good prices in the world market while our requirements of food both rice and subsidiary food stuffs ………….. 15 (rise) in price.

(b) Fill in the blanks with the correct preposition (where necessary)

As Assistant Secretary …………… 16 charge …………… 17 subjects, it was my duty to convene groups of officers dealing ………… 18 different aspects of development work in the Ministry ………. 19 time to time. They discussed ………… 20 various problems that they confronted and which they could not cope ……… 21 on their own. We were thus able to share our experience ……… 22 each other and make concrete proposals ……….. 23 the Secretary every month. He in turn put ………. 24 his own plans for discussion ……………. 25 these meetings.

(c) Underline the correct letters given within brackets that would complete the spelling of the following words.

26. Har……………… ment (rass/as/ass).
27. Ember…………… (rass/as/ass).
28. Tol………….. (arreance/earnce/erence).
29. Par…………..arian (liament/limen/liment).
30. Bal……………ing (let/lat/lot).
31. Itin………… (erary/arary/erarie)
32. Pers…………… (everance/everence/ewerence).
33. Bour…………… (geoise/joursie/juwarsy).
34. Prolet …………. (ariet/ariat/eriyat).
35. Com……………… ate (memorr/emor/memor).

(d) In each of the following statements underline the correct word within brackets:-

36. The inventory was checked by the Board of (Survellance/Survey/Surveyours).

37. At the inquiry I had to be satisfied that the accused officer had (contradicted /contravened/ contaminated) the regulations.

38. Every receipt should have a (counterfoil / counterfeit / counterpane) for the purpose of audit.

39. There was a possibility that the prosecution had (fabricated / fumigated / promulgated) the evidence.

40. (Discrete/Discretionary/Discriminatory) power was given to the Head of the Department under the relevant Act.

41. The Police Party had (laid/lied/lain) in ambush until the bribe taker arrived.

42. The entire staff turned upon (facilitate / infiltrate / felicitate) the watcher on his retirement.

43. In times of national crisis we must avoid (luxuriant/ luxurious) habits.

44. Martial music was played over the radio during height of the battle to keep up the (moral/morale/ morals) of the people.

45. Candidates are advised to use (Stationary / Stationery) sparingly owing to the acute paper shortage.

(e) Underline the correct phrase in the brackets that means the same as the word or phrase underlined in each sentence:

46. In good management the boss should, support his staff in their work (back out / back up / back away).

47. The sales and replacement of stock amounted to over Rs. 5,000 (turn out / turn up / turn away).

48. We were warned at the start not to let out work get into arrears (set out /outset).

49. The younger son wasted his father's wealth in a few years (ran over/ ranthrough).

50. I wanted to see the film, but the queue deterred me from going (put away / put off).

Part B

Read the following passage carefully and then answer the questions set out below:

Most modern political ideals such as for example, as justice, liberty, constitutional government, and respect for the law or at least the definitions of them, began with inflection of Greek thinkers upon the institutions of CityState. But in the long history of political thought the meaning of such terms has been variously modified and always that meaning has to be understood in the light of the institutions by which the indicates were to be realized and of the society in which those institutions did their work. The Greek City States was so different from the political communities in which modern men live that it requires no small effort of the imagination to picture its social and political life. The Greek Philosophers were thinking of political practices far different from any that have prevailed commonly in modern world, and the whole climate of opinion in which the work was done was different. Their problems though not without their analogies in the present, were never identical with modern problems, and the ethical apparatus by which political life was evaluated and criticized varied widely from any that now prevails. In order to understand at all accurately what their theories meant is necessary first to realize at least roughly what kind of institutions they had in view and what citizenship connected, as an effect as and an ideal, to the public for whom they wrote. For this purpose the Government of Athens-is especially important, partly because it is the best known, but chiefly because it was an object of special concern to the greatest of Greek Philosophers.

As compared with modern states the ancient City-State was exceedingly small both in area and in population. The numbers were exceedingly uncertain but, a figure somewhat in excess of three hundred thousand would be approximately correct. Such an arrangement of a small territory dominated by a single City was typical off the City State.

In each of the following cases, choose the alternative which in your opinion supports the views expressed in the above passage. Place a tick (right mark) against the correct answer:–

51. Athens is significant for the students of Greek political thought mainly because:–
   (a) it was the most powerful of the Greek City States;
   (b) its ideals had been carefully studied by the Greeks themselves;
   (c) it had the most ideal form of Government;
   (d) it is the best known of the Greek City-State;

52. Greek political thought was concerned with problems
   (a) entirely unrelated to;
   (b) identical with;
   (c) different from Analogous but to.

53. The moral and religious basis of Greek political idea is :–
   (a) very similar to modern moral and religious ideas ;
   (b) unknown ;
   (c) very different from modern moral and religious ideas.

54. It is
   (a) easy
   (b) not at all easy
   (c) impossible,
   for a modern man to imagine what life was like in a Greek City-State.

55. In comparison with the ancient Greek City States are:–
   (a) very large;
   (b) very small;
   (c) about the same size.

56. The population of an ancient Greek City States was:–
   (a) much less that 300,000
   (b) over 3 million
   (c) just over 300,000

57. The City-State of Athens comparisons:–
   (a) a small territory govern by a single city;
   (b) a large territory govern by a number of cities;
   (c) a small territory with village councils;
   (d) a large territory with a decentralized administration.

58. At different times in the history of the world people:–
   (a) have thought in basically the same way;
   (b) have thought in different ways;
   (c) have contradicted the views of people of the previous generation.

59. Details of political theory are derived from Greek Political thought:–
   (a) because the Greek City States was very similar to modern states;
   (b) in spite of Greek City State being very different from modern States;
   (c) because modern political theorists are students of Greek Philosophy

60. The meaning of political ideal at a particular moment in European History since the time of the Greeks can be defined only be:–
   (a) relating it to its context;
   (b) Tracing it back to its original meaning among the Greeks;
   (c) Investigating the meaning of the Greek word for it;
   (d) Taking into account only those features in it which have persisted throughout its history

61. Write sentences using each of the following words so as to bring out its meaning clearly :-
   Arbitration, emoluments, etiquette, consolidate, hypothetical, retrospective, exigencies, evaluate, review, empower.

*EITHER*

62. Write a letter to the Head of an Educational Institute in an English speaking country, setting out the following information in an orderly manner

   (i) The equivalence of our examination certificate to the certificate specified in this letter cannot be determined as the examining authorities in Sri Lanka have not been consulted by the institution concerned in that country;

   (ii) The G.C.E. (Ordinary Level) Credit Pass has been officially equated with an Ordinary Pass in London G.C.E. (Ordinary Level);

   (iii) The receipt of the letter sent to the Commissioner General of Examinations is acknowledged;

   (iv) Any further information in this matter may be obtained from the Embassy of the Republic of Sri Lanka in that country.

63. Write a memorandum to the Secretary, Bureau of Standards marking out a case for the adoption of the 24 hours clock in this country stating the advantages of such a measure.

***பின்னிணைப்பு 'ஆ'***

1. ***முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை*** :

*1.1* முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலகர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

*1.2* பின்வரும் பாடப்பரப்புகளிலான பரீட்சை:-

பகுதி I :

(i) நிதியியல் - நிதியியல் தொடர்பான பரீட்சை பின்வரும் விடயப்பரப்புக்கள் அடிப்படையில் அமையும்:

(அ) இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் - பகுதி I (அத்தியாயம் X நீங்கலாக)

(ஆ) நடைமுறை ஆண்டின் மதிப்பீடுகள். உ-ம் : அவற்றின் ஒழுங்குகள், வருமானத் தலைப்புகள், நிதி மற்றும் நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்.

(இ) கச்சேரிகளினுள் கையாளப்படும் குறித்த கணக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள்.

(ii) இலங்கையின் வரலாறும் புவியியலும் :

**பகுதி II - விசேட வினாத்தாள் :**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்
(iv) இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளிவிவகார அமைச்சின் ஒழுங்குவிதிகள் மற்றும் கணனி அறிவு

1.3 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட்சாத்திகள் சித்தியடைய ஒவ்வொரு வினாத்தாளிலும் 40 வீதமான புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

1.4 அலுவலகர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனியாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ள போதே அத்தகைய பரீட்சார்த்தி சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

**2. இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை :**

2.1 இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இரு பகுதிகளுக்கும் தோற்றலாம்.

**2.2 பின்வரும் பாடங்களிலான பரீட்சை :**

**பகுதி I -**

(i) இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும்,
(ii) நிருவாகம் - இவ்வினாத்தாள் பின்வரும் பரப்புகளை உள்ளடக்கியிருக்கும்:

(அ) அலுவலக நடைமுறைகளும் நிறுவன முறைமை களும்.

(ஆ) தாபன விதிக் கோவை - தொகுதி I மற்றும் தொகுதி II

**பகுதி II - விசேட வினாத்தாள்**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்

2.3 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட்சார்த்திகள் சித்தியடைய ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையேனும் பெறுதல் வேண்டும்.

2.4 அலுவலகர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனியாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ள போதே அத்தகைய பரீட்சார்த்தி அப்பகுதியில் சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

**குறிப்பு:-** (i) அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான வினாக்கள் பிரதானமாக இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசிய லமைப்பிற்கான விசேட குறிப்புகளை உள்ளிட்டு இலங்கை அரசின் பாராளுமன்ற முறைமை மற்றும் அரசியலமைப்பு விருத்திப் பரிணாம வளர்ச்சி போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கும். சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகள், இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள் இன்னும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் கடமைகள் மற்றும் உரிமைகள், தூதுவராலயச் சட்டம் மற்றும் உடன்படிக்கைகளுக்கான சட்டம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(ii) சட்டத்தரணியாக விளங்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்று விளங்கும் அலுவலகர் ஒருவர், அவர் உரிய பரீட்சையில் அப்பாடங்களில் சித்தியொன்றைப் பெற்றுள்ளார் எனக்கருதி அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் எனும் வினாத்தாளுக்கு அவர் தோற்றுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

**3. வெளிநாட்டு மொழிகள் :**

3.1 வெளிநாட்டு மொழிகள் :

(i) அரபு மொழி
(ii) பிரஞ்சு மொழி
(iii) ரஷ்சிய மொழி
(iv) ஸ்பானிய மொழி
(v) ஹிந்தி மொழி
(vi) சீன மொழி
(vii) ஜேர்மன் மொழி
(viii) யப்பான் மொழி
(ix) ஆங்கில மொழி
(x) கொறியன் மொழி

3.2 வெளிநாட்டு மொழிகள் வினாத்தாள்கள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாக இருக்கும். சித்தியெய்துவதற்குப் பரீட்சார்த்திகள் 40% ஆன புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

* மேற்கூறிய பரீட்சையின் பிற நாட்டு மொழி தொடர்பான விடயப் பரப்புக்கள் இவ் வர்த்தமானியின் ஆங்கிலப் பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளன.

## அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2011 (II) (2013)

2004.12.24 ஆந் திகதிய 1372/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 5.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2014, சனவரி மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காது இருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பப்படிவத்தின் உரிய தலைப்பினை, இங்கு காட்டப்பட்டுள்ள நகர மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிட்டுள்ள அட்டவணைக்கேற்ப பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பம் செய்துள்ள நகரம்/நகரங்கள் பின்னராக மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 05 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பதுளை | 21 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட இவ் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்வொழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

4. **தகைமைகள்**.- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும்.

5. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2013, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

7. **விண்ணப்பங்கள்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இல. 1 முதல் 5 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவினதான ஒரு தாளில் விண்ணப்பத்தைத் தயார்செய்தல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் தயாரித்துக் கொள்ளப்படுமாயினும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயார்செய்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பி வைத்தலாகாது என அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தில் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின்போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதானால் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 200 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்தல் வேண்டுமென்பதுடன் நாட்டில் அமைந்துள்ள மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு அல்லது எந்தவொரு தபால் அலுவலகத்திற்கும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப் பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறேதேனும் ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டு, உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை மற்றும் பரீட்சையின் பெயரையும் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொழும்புக்குப் புறம்பான பிரதேசமெனின் உங்களின் மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் பரீட்சை விண்ணப்பத்தின் பிரதியையும் தொலைநகல் மூலம் உங்களுக்கும் அனுப்ப ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பு.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்புதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதலாகாது.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

10. அலுவலர்கள் தாம் தொடர்புடைய சேவையில் சேர்வதற்கு உரிய பரீட்சைக்கு தோற்றிய மொழிமூலம் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. உத்தியோகத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் 5:2 பந்தியைப் பார்க்கவும்.)

12. அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றை அம்மொழியினாலே நிரப்பவும் வேண்டும்.

13. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேற்று அட்டவணை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்துமூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| | பாடம் | பாட இலக்கம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (01) | அலுவலக முறைகளும் நடைமுறையும் | 01 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| (02) | அரசாங்க அலுவலகங்களில் கையாளப்படும் கணக்கு முறைகள் | 02 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| | மொத்தம் : | | | 200 |

14.1 அலுவலக முறைகளும் நடைமுறையும்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

14.2 அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள், கணக்குப் பதிவேடுகள், அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத் தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

15. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2013, செத்தெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2011 (II) 2013**

Efficiency Bar Examination for Officers in Class II of Public Management Assistants' Service – 2011 (II) 2013

(இப்பரீட்சை அறிவிப்பின்படி இணைந்த சேவைகளில் உள்ள அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இன் அலுவலர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2 இன்படி தாங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும். பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1. 1.1 முதலெழுத்தை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.
உதா : SILVA, M. A.
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ————.
1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.
1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :————.

2. சேவையாற்றும் இடமும் முகவரியும் :-

2.1 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.
2.2 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :————.
2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.

3. பால் :-
பெண் – 1, ஆண் – 0

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

5. நீங்கள் இம்முறை தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

6. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :————.
6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :————.
6.3 அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இற்கு நியமனம் பெற்ற திகதி :————.

7. 7.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? :————.
7.2 முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :————.
7.3 பற்றுச்சீட்டை ஒட்டுவதற்காக :————.

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், நான் பரீட்சைக்கு முறையாகத் தோன்றுகின்றேன் என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும்/ பரீட்சைக் கட்டணம் ..................................... ரூபாவை மாவட்ட செயலகத்திற்கு/ பிரதேச செயலகத்திற்கு/ ....................................... தபால் அலுவலகத்திற்கு ................................... ஆந் திகதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்து கின்றேன். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சை சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

திரு./திருமதி/செல்வி ...................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ..................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் அவர் முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதி லிருந்தும் விடுவிக்க முடியும் என்றும்/ உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட் டுள்ளதெனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப் பட்டதென்றும்,

(ii) அலுவலர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,

(iii) அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/ தோற்றவில்லை* என்றும்,

(iv) அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியிருப்பத னால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள பற்றுச்சீட்டை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,

(v) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

10-380

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.